DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | நாகசுந்தரம் |
| Father Name | : | இளங்கோவன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026.

(1, 2, 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 3, 4, 6, 8, 9, 10 மற்றும் 12 முதல் 18 எதிரிகள் ஆஜர். 11வது எதிரி இறப்பு. 5வது எதிரி ஆஜர் இல்லை. 5வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரையில் கதவு எண்.166 முருகன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தை நான் பார்க்கவில்லை. நான் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இருக்கவில்லை. ஆஜர் எதிரிகளை நான் பார்க்கவில்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள், நான் வழக்கு சம்பவம் குறித்து தெரியாது என்று சொன்னேன். என்னிடம் பெயர், விலாசம் கேட்டு எழுதிக்கொண்டார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

கடந்த 31.01.2013ம் தேதி இரவு 07.50 மணியே போல நான் வீட்டில் இருந்த போது, ரோட்டில் சப்தம் வரவே ரோட்டில் வந்து பார்த்த போது TN 59 AQ

6789 என்ற Skoda கார் நின்று கொண்டிருந்தது என்றும், அதே ரோட்டில் கருப்பு கலர் பல்சர் வண்டி பக்கத்தில் சிவப்பு கலர் டீ சர்ட் போட்டுக்கொண்டு ஒருவர் கையில் உருட்டு கட்டையுடன் நின்று கொண்டிருந்தார் என்றும், அதே சமயத்தில் ஓரமாக ஸ்டாண்ட் போட்டு நிறுத்தப்பட்டிருந்த கருப்பு கலர் பல்சர் மோட்டார் சைக்கிளின் அருகே கருப்பு சட்டை போட்டவன் நின்றுகொண்டிருந்தான் என்றும், மற்றொருவன் சிவப்பு கலர் சட்டை போட்டு பனிக்குல்லா அணிந்து கையில் உருட்டு கட்டையுடன் நின்றிருந்தார் என்றும், மேற்படி சிவப்பு கலர் இருசக்கர வண்டியின் மீது மோதிவிடாமல் இருக்க மணிகண்டன் அவருடைய Skoda காரை வலது பக்கமாக திருப்ப நினைத்த போது, அவருக்கு பின்னால் வந்த TATA ACE TN 64 B 2053 குட்டி யானை வண்டி அவரது காரின் இடது பக்கம் உரசியவாறு முன்னால் வந்து நின்றது என்றும், அந்த இடத்தில் ரோட்டோர மின்கம்பத்தில் டியூப் லைட் எரிந்துகொண்டிருந்தது என்றும், அந்த வெளிச்சத்தில் பார்த்த போது, சிவப்பு கலர் பல்சர் ஓட்டி வந்த பேண்ட் சட்டை அணிந்த இருவர் பல்சர் வண்டியை, அவர்கள் முன் போட்டுவிட்டு குட்டி யானை வண்டிக்கு ஓடிச்சென்று அருவாளையும், பெரிய கத்தியையும் எடுத்தார்கள் என்றும் அதே சமயம் குட்டி யானையில் வந்த வெள்ளை சட்டையும், கட்டம் போட்ட கைலியும் அணிந்திருந்த ஒருவரும், கைலி துண்டு போட்டிருந்த ஒருவனும், கைலி முண்டா பனியன் போட்டு துண்டு தலையில் கட்டிய ஒருவனும், வெறும் கைலி மட்டும் கட்டியிருந்த ஒருவனும் குட்டி யானையில் இருந்து ஆளுக்கொரு சாமான்களை எடுத்துக்கொண்டு அவர்கள் வண்டியை நோக்கி ஓடி வந்தார்கள் என்றும், அவர்கள் ஓடி வரும் போது அதே சமயம் பேண்ட் சட்டை அணிந்திருந்த இருவர் அவர் கையில் வைத்திருந்த அருவாள் மற்றும் கத்தியால் அண்ணன் பொட்டு சுரேஷ் உட்கார்ந்திருந்த காரின் முன்புற கண்ணாடியை அடித்து உடைத்தார்கள் என்றும், சிவப்பு சட்டை, பனிக்குல்லா அணிந்திருந்தவன் கையில் வைத்திருந்த உருட்டு கட்டையால் அவர் காரின் முன்புற கண்ணாடியை அடித்து

உடைத்தான் என்றும், அதே சமயத்தில் பொட்டு சுரேஷ் அண்ணன் காரை உடைப்பது யாருடா என்று கதவை திறந்து கொண்டு ஒரு காலை வெளியில் ஊன்றி தலையை நீட்டி கேட்ட போது, பேண்ட் சட்டை அணிந்திருந்த ஒருவன் கையில் வைத்திருந்த அருவாளால் பொட்டு சுரேஷ் அண்ணனின் தலையில் மாறி மாறி வெட்டினான் என்றும், அதே சமயம் பேண்ட் சட்டை போட்ட மற்றொருவன் கத்தியால் பொட்டு சுரேஷ் அண்ணனின் தாடையில் குத்தினான் என்றும், அதனால் சுரேஷ்பாபு அய்யோ அம்மா என்று அலறவே பேண்ட் சட்டை அணிந்த இருவரும் பொட்டு சுரேஷ் அண்ணனின் சட்டையை பிடித்து காரைவிட்டு வெளியே இழுத்து போட்டு அருவாள், பெரிய கத்தி, வாள் கத்தி ஆகியவைகளால் சுற்றி வளைத்து பின்பக்கமாக தலை, முன்தலை, முதுகு, மார்பு, வயிறு, கைகள், இடது கை, வலது கை, தொடை, இடுப்பு விலா என உடம்பு முழுவதும் மாறி மாறி வெட்டி யும் மற்றும் குத்தினார்கள் என்றும் அந்த சமயத்தில் மணிகண்டன் காரின் உள்ளேயே இருந்தார் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.01.28 12:33:39 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.